## ஏப்ரல் – 26

**"அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசித்தவன், தேவன் தம்முடைய கிரியைகளை முடித்து ஓய்ந்ததுபோல, தானும் தன் கிரியைகளை முடித்து ஓய்ந்திருப்பான்."**

**- எபி 4 : 10**

ஏழு நாட்களில் ஒரு நாளை உரிமையுடன் கேட்பதற்குப் பதிலாக, அன்பின் பிரமாணம் உண்மையாகவே நம்முடைய முழு நேரத்தையும் கட்டுப்படுத்துகிறது. ஒழுங்குபடுத்துகிறது. வாரத்தின் ஏழு நாட்களில் நாம் நமது கர்த்தராகிய தேவனிடத்தில் நம்முடைய முழுஇருதயத்தோடும், முழுமனதோடும், முழுஆத்துமாவோடும், முழுபலத்தோடும் அன்பு கூற வேண்டியவர்களாக இருக்கிறோம். வாரத்தின் ஏழு நாட்களிலும் நம்முடைய பிறனிடத்தில் நம்மைப்போல அன்பு கூற வேண்டியவர்களாயிருக்கிறோம். வாரத்தில் ஏழாம் நாள் நாம் ஓய்ந்திருக்க வேண்டியவர்களாகவும் இருக்கிறோம். நம்முடைய சொந்த வேலைகளிலிருந்து ஓய்ந்திருத்தல், கிறிஸ்துவின் முடிந்த வேலையில் விசுவாசத்தினாலே ஓய்ந்திருத்தல், தேவனுடைய அன்பில் ஓய்ந்திருத்தல், எல்லாப் புத்திக்கும் மேலானதும், நமது இருதயங்களில் தொடர்ந்து ஆளுகை செய்கிறதுமான தேவ சமாதானத்தில் ஓய்ந்திருத்தல்.

**-Z ’02, 205 (R 3037).**

இளைப்பாறுதலில் பிரவேசிப்பது என்பது கிறிஸ்துவின் முடிந்த வேலையை தேவனுக்கு முன்பாக நாம் நீதிமான்களாக்கப்படும் வேலையாக நாம் ஏற்றுக் கொள்ளுவதையும், ஆயிரவருஷ யுகத்துக்குரிய எல்லா ஆசீர்வாதங்களையும் அநுபவிக்கிறதாக எண்ணப்படுதலின் உணர்வில் நாம் பூரண உறுதியுடன் இருக்கிறோம் என்பதைக் குறிக்கிறது. தன்னுடைய சொந்த நீதியை நிரூபிக்க நாடுவதற்குப் பதிலாக, இந்த விசுவாசத்தை உடையவன் கிறிஸ்துவின் நீதியை அநுபவித்துக் கொண்டிருக்கிறான் என்ற அர்த்தத்தில் சமாதானத்தை உடையவனாக இருக்கிறான். இவ்விதமாக நீதிமானாக்கும் விசுவாசம், நீதிமானாக்கப்படுதலின் இளைப்பாறுதலை அவனுக்குக் கொடுக்கிறது. இன்னும் பிரதிஷ்டையில் தனக்காகவும் உலகத்துக்காகவும் ஜீவித்திருப்பதிலிருந்து ஒழிந்து, தேவனுடைய ஏற்பாட்டின் வெற்றியுடன் கூடிய விளைவுக்குப் பூரண நம்பிக்கையுடன் எதிர்நோக்கி இருப்பதில் தேவன் அனுபவிக்கிறதைப் போலொத்த இளைப்பாறுதலை உடையவனாக இருக்கிறான். **-P ’34, 47.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

எபி 3:7-4 :11; யோபு 22:21,26; 34:29; சங் 4:8; 17:15; 25:12; 29:11;37:4,11,37; 119:165; 125:1,5; நீதி 3:17,24; ஏசா 26:3,12; 28:12; 53:5;54:10,13; 57:2,19; யோவா 14:27; 16:33; அப் 10:36; ரோம 5:1; 8:6; 14:17;15:13; கலா 5:22; எபே 2:14-17; பிலி 4:7,9; கொலோ 3:15; 2தெச 3:16. **கோபுர வாசிப்பு : Z ’14, 25 (R 5387).**

**வினாக்கள் :** இந்த வசனத்தின்படி இந்த வாரம் ஏற்பட்ட அனுபவங்கள் என்ன? அவைகள் எவ்வாறு சந்திக்கப்பட்டன? அதில் எது உதவியாக அல்லது இடையூறாக இருந்தது? அவை எதில் முடிந்தன?